# இலங்கை மத்திய வங்கி

## வங்கி மேற்பார்வைத் திணைக்களம்

2020 ஏப்பிறல் 27 நாணய விதிச் சட்டக் கட்டளை 2020இன் 01ஆம் இலக்கம்

---

### உரிமம்பெற்ற வங்கிகளின் அடகுபிடித்தல் முற்பணங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம்

திருத்தப்பட்டவாறான 1949ஆம் ஆண்டின் 58ஆம் இலக்க நாணய விதிச் சட்டத்தின் 104(1)(ஆ) பிரிவின் கீழ் வெளியிடப்பட்டது.

கொவிட்-19 பரவலினால் தோன்றிய மோசமான பொருளாதார சூழ்நிலைகளின் காரணமாக, குறுங்கால நிதியிடல் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்காக தங்க ஆபரணங்களை அடகுவைக்கும் குறைந்த வருமானத்தினைப் பெறும் தனிப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குவதன் அவசியத்தினைப் பரிசீலனையில் கொண்ட நாணயச் சபை, (இதனகத்துப் பின்னர் உரிமம்பெற்ற வங்கிகள் என அழைக்கப்படும்) உரிமம்பெற்ற வர்த்தக வங்கிகளினாலும் உரிமம்பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகளினாலும் வழங்கப்படும் அடகு முற்பணங்களின் உயர்ந்தபட்ச வட்டி வீதம் தொடர்பில் இத்தால் கட்டளையொன்றினை விடுக்கிறது.

| | | |
|---|---|---|
| 1. நாணய விதிச் சட்டத்தின் கீழ் அதிகாரமளித்தல் | 1.1 | நாணய விதிச் சட்டத்தின் பிரிவு 104(1)(ஆ) இன் நியதிகளில், நாணயச் சபையானது, உரிமம் பெற்ற வங்கிகள் வேறுபட்ட வகைக் கடன்களுக்கு அல்லது ஏனைய கொடுகடன் தொழிற்பாடுகளுக்காக விதிக்கக்கூடிய உயர்ந்தபட்ச வட்டி வீதத்தினை காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கிறது. |
| 2. இக்கட்டளையின் ஏற்புடைத்தன்மை | 2.1 | இக்கட்டளையானது, உரிமம்பெற்ற வங்கிகளினால் அல்லது ஏதேனும் கிளையினால் அல்லது அத்தகைய வங்கியின் முகவரினால் மேற்கொள்ளப்படும் (இதனகத்துப் பின்னர் அடகுபிடித்தல் என குறிப்பீடு செய்யப்படும்) அடகுபிடித்தல் வியாபாரத்திற்கு ஏற்புடைத்தாக இருத்தல் வேண்டும். |
| 3. அடகுபிடித்தல் முற்பணங்கள் மீதான உயர்ந்தபட்ச வட்டி வீதம் | 3.1 | பிணையாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தங்கத்தினால் செய்யப்பட்ட தனியாளுக்கான பொருட்களினால் பிணையுறுதி வழங்கப்பட்ட அடகுமுற்பணங்களுக்காக வழங்கப்பட்ட பணத்தின் மீது வர்த்தக வங்கிகளினால் விதிக்கத்தக்க வட்டி வீதம், ஓராண்டிற்கும் குறைவான காலத்தினைக் கொண்ட முற்பணங்களுக்கு ஆண்டிற்கு வட்டி வீதம் 12 சதவீதமாகவும் மாதமொன்றிற்கு 1 சதவீதமாகவும் இருத்தல் வேண்டும். |
| | 3.2 | மேற்குறிப்பிட்ட வட்டி வீதம் அனைத்து புதிய அடகுபிடித்தல் முற்பணங்களுக்கும், இக்கட்டளை ஆரம்பமாகின்ற திகதியன்று புதுப்பிக்கப்படுகின்ற ஏற்கனவேயுள்ள அடகுபிடித்தல் வசதிகளுக்கும் ஏற்புடைத்ததாக இருத்தல் வேண்டும். |

**பேராசிரியர் டபிள்யு. டி. லக்ஷமன்**

நாணயச் சபையின் தலைவரும் இலங்கை மத்திய
வங்கியின் ஆளுநரும்